# மாணவர்கள் கற்றுக் கொடுத்த பாடம்

அன்புடையீர் வணக்கம்!

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு வந்த ஒரு தமிழ் திரைப்படம் ராஜநாகம். மாணவன் வேடத்தில் கதாநாயகனாக ஸ்ரீகாந்த் (பழைய நடிகர்) நடித்த படத்தில் ஒரு பாடலில் "மாணவன் நினைத்தால் நடத்திக் காட்டுவான். அவன் நெஞ்சம் ஒரு நெருப்பு... அவன் நேர்மையின் மறுபிறப்பு..."என்கிற பாடல் வரிகள் இன்றைக்கு 50 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் நினைவூட்டுகிறது.

1965ல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தை நடத்திக் காட்டிய மாணவ சமுதாயம் தமிழரின் பண்பாட்டை காக்க நடத்தியப் போராட்டம் ஜல்லிக்கட்டுப் போராட்டம்.

இந்தப் போராட்த்தின் மூலம் மாணவர்கள் பல்வேறு பாடங்களை கற்றுத் தந்திருக்கிறார்கள். பாடம் படிக்க வேண்டிய மாணவர்களிடம் நாம் கற்றுக் கொண்ட பாடங்கள்.

- நாங்கள் வெறும் வாட்ஸ்ஆப், பேஸ்புக், டுவிட்டர் என்று மட்டுமே முடங்கிப் போகிறவர்கள் அல்ல. சமுதாயத்திற்கு ஒரு தீங்கு ஏற்படும்போது அதை தடுப்பதற்கு அணி திரள்வோம் என்பதை நிருபித்திருக்கிறார்கள்.

- மக்களுக்கு தொல்லை தரக்கூடிய போராட்டங்களை அரசியல் வாதிகள் நடத்துவதால், மக்களிடையே அதற்கு வரவேற்பு கிடைப்பதில்லை. மாறாக சலிப்புதான் ஏற்படுகிறது. இதனால் நியாயமான போராட்டங்கள் கூட கேலிக்கூத்தாகிறது. எனவே அரசியல்வாதிகளை போராட்டக்களத்திற்குள் மாணவர்கள் அனுமதிக்கவில்லை

- மேக்கப் போட்டு திரையில் மக்கள் சேவகனாக கதாநாயகனாக நடிப்பவர்கள் பேக்கப் ஆனதும், மக்களுக்கு ஏற்படும் சங்கடங்களுக்கு ஆதரவாக குரல் கொடுப்பதில்லை. அப்படி குரல் கொடுக்கும் சிலர் ஏ.சி. ரூமில் உட்கார்ந்து எதிர்ப்புக் குரலை பதிவு செய்கின்றனர். அப்படியே அவர்கள்


# மித்ரா டைம்ஸ்

மாத இதழ்

மித்ரா 2 ஜனவரி 2017 டைம்ஸ் 9

அச்சிட்டுவெளியிடுபவர்
ஆசிரியர்
**எம்.எஸ்.மூர்த்தி**

நிர்வாக ஆசிரியர்
**திருமதி. சுஜாதா மூர்த்தி**

செய்தியாசிரியர்
**தம்பி முருகானந்தம்**
**9381788645**

இதழ் சிறப்பு ஆலோசகர்கள்
G. **ராம்மோகன்**
R. **குணசேகர்**

நிர்வாக மேலாளர்
V. **மோகன்ராஜ்**

சட்ட ஆலோசகர்
V.N.**பிரசாத்** M.A.,B.L.,

மாவட்ட செய்தியாளர்கள்
**திண்டுக்கல் முபாரக்**
**கோவை K. சாகுல் ஹமீது**
**சேலம் பிரவீன்குமார்**
**ஈரோடு ஸ்ரீரங்கன்**

**வடிவமைப்பு**
**மித்ரா டிசைன்ஸ்**
விற்பனை, விளம்பரம், சந்தா
**044-23743007/8**



## அலுவலக முகவரி

602, ஸ்ருதி பிளாக், சித்ரா அவென்யூ,
9, சூளைமேடு ஹைரோடு,
சென்னை94.
போன் : 044-23744661,23743007/8

**Whatsapp No. 9841843773**
**E-mail : mitratimes2015@gmail.com**
**Website : www.mitratimes.com**

# உள்ளே...

ஆசிரியர் கடிதம்......................3
காரைக்கால் அம்மையார்..........5
கட்டுமானத்தொழில் ...............7
அவர்களும் மனிதர்கள்தானே....8
தங்கநகை வாங்கும்போது 1011
நன்மை தரும் நாட்டு மாடுகள் 12
உலகத்தமிழர் உணர்வுக் கட்டு 1314
ஆங்கிலம் 15 16
சினிமா17 18
பனங்கற்கண்டு 19
அன்றே சொன்னார் அண்ணா 20
குழந்தை வளர்ப்புத் தொடர் 21
மாணவர்கள் பக்கம் 22
கபாலிகான் 23 24
ஜெயகௌரி 25
இராசிப்பலன் 26
கண்ணதாசன் 27
எம்.பதில்கள் 28 29
காதலர் தினம் 30

போராட வந்தாலும் அவர்களை பார்ப்பதில் மக்கள் கவனம் செலுத்துவதால் போராட்டத்தின் நோக்கம் சிதறுண்டு போகிறது. எனவே திரையுலகத்தைச் சார்ந்த எவரையும் தங்கள் போராட்டக் களத்தில் அனுமதிக்கவில்லை.

போராட்டத்தில் தன்னை வருத்திக் கொண்டு கோரிக்கைக்கு குரல் எழுப்பவது என்ற புதிய சித்தாந்தத்தை உருவாக்கியிருக்கிறது மாணவ சமுதாயம். ஆயிரம் பேர் 4 மணிநேரம் ஆர்ப்பாட்டம் நடத்திய பின்பு அந்த இடம் குப்பைகூளமாக காட்சியளிக்கும். ஆனால் 7 நாட்கள் 24 மணிநேரமும் இரவு பகலாக போராடியும் சுற்றுச்சூழல் எந்தவிதத்திலும் பாதிக்கப்படவில்லை.

பல இலட்சம் இளைஞர்கள் கூடிய அந்த கூட்டத்தில் பங்குபெற்ற இளம் பெண்கள் மீது ஒரு சிறு துரும்பு கூட போடப்படவில்லை. சின்ன தொல்லைகள் கூட ஏற்படவில்லை. பெண்களை மதிப்பதில் தமிழக இளைஞர்கள் மற்ற மாநில இளைஞர்களுக்கு முன்னோடியாக அமைந்தனர்.

இப்படி புதிய சிந்தனையோடு போராடிய மாணவர் சமுதாயம் எதிர்காலத்தில் போராட்டக் களத்திற்கு வரும் அரசியல்வாதிகள், அரசு ஊ ழியர்கள், ஆசிரியர்கள் சமுதாய அமைப்புகள் என யாராக இருந்தாலும் அவர்களுக்கு இந்தப் போராட்டம் ஒரு பாடமாக அமையும்.

கடைசி நாளில் ஏற்பட்ட விரும்புதகாத சம்பவத்தை மனதில் குறித்து வைத்துக்கொண்ட மாணவர்கள் அடுத்தப்போராட்டக் களத்தில் அதை எப்படி சந்திப்பதென்பதையும் முன்கூட்டியே திட்டம் வகுத்துக் கொள்வார்கள்.

வாழ்க மாணவர்கள், இளைஞர்கள் சமுதாயம்! அவர்களுக்கு உறுதுணையாக இருந்த மக்கள் சமுதாயம்!

# பெண்களால் முடியாதது எதுவுமில்லை

## வழிகாட்டுகிறார் வட்டாரப் போக்குவரத்துத்துறை அதிகாரி ஜெயகௌரி (R.T.O.)

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போ மென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார் (கும்மியடி)
மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே
வீட்டினி லெம்மிடங் காட்ட வந்தாரதை
வெட்டி விட்டோ மென்று கும்மியடி கும்மியடி
பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினி லாணுக்கிங்கே பெண்
இளைப் பில்லை காணென்று கும்மியடி (கும்மியடி)
காத லொருவனைக் கைப்பிடித்தே யவன்
காரியம் யாவினுங் கைகொடுத்து
மாதர றங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச்செய்து வாழ்வமடி (கும்மியடி)
வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி






பாட்டுக்கவி பாரதியின் இந்த புரட்சி வரிகள் இன்றைக்கு உண்மையாகியிருக்கிறது.

இன்றைய காலக்கட்டங்களில் பெண்கள் தொடாத துறையே இல்லையென்றே சொல்லலாம். குறிப்பாக ஆண்களால் மட்டுமே முடியும் என்ற போக்குவரத்துத்துறையில் பெண்கள் கால்பதித்துள்ளனர். விமானம், ரயில், லாரி, பஸ், ஆட்டோ என அனைத்து வாகனங்களையும் பெண்கள் இயக்கி வருகின்றனர். இந்தியப் போக்குவரத்துத்துறை வரலாற்றில் முதன்முறையாக வட்டார போக்குவரத்து அதிகாரியாக ஜெயகௌரி பதவியேற்றுள்ளார்.

சேலம் அரிசிபாளையத்தை சேர்ந்த ஜெயகௌரி தந்தை வேலாயுதம் மறைந்துவிட்டார். தாய் சுசீலா மட்டுமே. ஓய்வு பெற்ற ஆசிரியையின் மகளான ஜெயகௌரி பத்தாம் வகுப்பு முடித்துவிட்டு பாலிடெக்னிக்கில் சேர்ந்துள்ளார். பள்ளிப்படிப்பை முடித்த பெண்களும் டெக்னிக்கல் பிரிவில் படிக்கலாம் என்று 1985 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். ஆட்சியில் அன்று கொண்டு வரப்பட்ட சட்டம் இவருக்கு இன்று அதிகாரியாக உயரும் அளவுக்கு வாய்ப்பளித்திருக்கிறது.

டிப்ளமோ முடித்தபின்பு பி.இ. மெக்கானிக்கல் இன்ஜினியரிங் படித்தார். எம்.சி.ஏ., எம்.பி.ஏ., பி.ஜி.எல். ஆகிய படிப்புகளையும் படித்துள்ள இவர் பி. ஹெச்.டி. ஆய்வையும் மேற்கொண்டு வருகிறார்.

படிப்பு முடிந்தபிறகு தொழில்துறையில் உதவிப் பொறியாளராக (A.E.) ஆக பணியாற்றியுள்ளார். பின்னர் 1998 ஆம் ஆண்டு கிரேடு 2 ஆக பதவி உயர்வு பெற்று பின்பு கரூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் பணியாற்றியுள்ளார். படிப்படியாக பணியாற்றிய இவர் தற்போது வட்டாரப்போக்குவரத்து அதிகாரியாக பணியாற்றி வருகிறார்.

இந்தத்துறையில் பணியாற்றுவதில் என்ன பெரிய சிக்கல் இருக்கமுடியும்மென்று நினைக்கக்கூடும். போக்குவரத்துத்துறை அதிகாரியாக இருப்பதால் வாகன தணிக்கைக்கு இரவு பகலென்று பாராமல் செல்ல வேண்டும். இவரைப் பின்பற்றியும் இவரது ஆலோசனைப்படியும் 40 பெண்கள் மோட்டார் வாகன ஆய்வாளராகவும் பணியாற்றி வருகின்றனர்.

ஜெயகௌரி எல்லா வாகனங்களையும் இயக்குவார். இருசக்கர வாகனம், லாரி, பஸ் ஆகியவைகளை ஓட்டுவதற்கான ஓட்டுநர் பயிற்சி எடுத்துள்ளார். 50 வயதான ஜெயகௌரியின் மூன்று சகோதரிகளுக்கு திருமணம் ஆகிவிட்டது. தனது பெற்றோரை கவனித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக திருமணம் செய்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# உள்ளூர் முதல் உலகம் வரை தமிழர்களின் உணர்வுக்கட்டு

அடிக்க அடிக்க பந்து மேலே எழும்பும்.

அரைக்க அரைக்க சந்தனம் மணக்கும்.

மிதிக்க மிதிக்க புழுவும் புளியாகும்.

என்கிற வரிகளை மெய்ப்பிக்கும் விதமாக கடந்த மாதம் 17ந் தேதி தொடங்கிய ஒரு போராட்டம் மெய்ப்பித்திருக்கிறது.

"ஜல்லிக்கட்டு". இந்த ஒற்றைச் சொல்லில் தொடங்கிய போராட்டம் உலகையே திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது. ஜல்லிக்கட்டுக்கு பெயர் பெற்ற மதுரை அவனியாபுரம், அலங்காநல்லூர், பாலமேடு என்று குறிப்பிட்ட மாவட்ட எல்லையைத் தாண்டி சென்னை, கோவை, திருச்சி என்று மற்ற மாவட்டங்களுக்கு பரவ அது கேரளா கர்நாடகா, ஆந்திரா, கேரளா, டெல்லி, மும்பை என மற்ற மாநிலங்களுக்கு பரவ பின்னர் இந்திய எல்லையைத்தாண்டி அமெரிக்கா, இங்கலாந்து, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா, ரஷ்யா, சீனா, கனடா, சுவிட்சர்லாந்து, அயர்லாந்து, சிங்கப்பூர், மலேசியா என உலகம் முழுவதும் ஜல்லிக்கட்டு வேண்டுமென்று ஒலிக்க துவங்கியது.

ஜல்லிக்கட்டுக்காக துவங்கப்பட்ட இந்தப்போராட்டம் பின்னர், ஜல்லிக்கட்டை தடைசெய்த பீட்டாவுக்கு எதிராக மாறியது. சிறிய குழந்தைகள் முதல் முதியவர் வரை **"வேண்டும் வேண்டும் ஜல்லிக்கட்டு வேண்டும்; தடைசெய். தடைசெய் பீட்டாவை தடைசெய்"** என முழக்கமிட்டனர்.

ஜல்லிக்கட்டுக்கு மட்டுமான இந்தப்போராட்டத்தின் துவக்கம் பின்னர் படிப்படியாக தமிழர்களுக்கு எதிரான சக்திகளுக்கு எதிரான போராட்டமாக மாறியது. குறிப்பாக மத்திய அரசின் தமிழின விரோதப்போக்குக்கு எதிராகவும் திரும்பியது.

ரூபாய் நோட்டு செல்லாது என்ற அறிவிப்பு, காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்காதது; தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகளுக்கு தீர்வு காணப்படாதது; மீனவ பிரச்சனையில் பராமுகமாக இருப்பது; பொங்கலுக்கு கட்டாய விடுமுறை இல்லை என்ற அறிவிப்பு என்பன போன்ற போக்குகள் மத்திய அரசு தமிழர்களுக்கு விரோதமாகவே செயல்படுகிறது என்ற எண்ணத்தை தோற்றுவித்துவிட்டது.

அதனுடைய வெளிப்பாடே உலகத் தமிழர்களின் உணர்வுகள் கட்டுப்பாட்டை மீறி பீறிட்டு வெளிவந்தன. மேலும் எரியும் தீயில் எண்ணெய் ஊற்றுவதைப்போல தெரிவிக்கப்பட்ட கருத்துக்களும் போராட்டத்தின் வீறியம் அதிகரிக்க காரணமாயிற்று.

குறிப்பாக ஜல்லிக்கட்டு விசாரணையின்போது நீதிபதிகள் பாரம்பரிய விளையாட்டு என்பதற்காக அனுமதிக்க முடியுமா? வீரவிளையாட்டு வேண்டுமென்றால் சிங்கத்தை கொடுத்தால் அடக்குவீர்களா? என்று கேட்டதும், சுப்பிரமணிசுவாமி டில்லியில் உட்கார்ந்துகொண்டு டுவிட்டர் மூலம் போராடுபவர்களை பொறுக்கிகள் என்று தொடர்ந்து சொல்லிக்கொண்டு வந்ததும்,

வானொலி விவாத நிகழ்ச்சி ஒன்றில் பேசிய பீட்டா அமைப்பின் தமிழகத்தை சேர்ந்த உறுப்பினர் ராதா ராஜன் என்பவர் "இத்தனை லட்சம்பேர் கூடுகிறார்களே? என்று கேட்டதற்கு, Free sex என்று அழைத்தாலே அதற்கும் கூட்டம் வரும் என்று பேசியதும், போராட்டத்தை பெரிய வடிவத்திற்கு கொண்டு செல்ல காரணமாக அமைந்துள்ளது.

இனி தமிழர்களுக்கு எதிராக எந்தவொரு செயல் நடைபெற்றாலும் அதற்கான எதிர்ப்புக் குரல்கள் உலகமெங்கும் ஒலிக்கும் என்பதை இந்தப் போராட்டம் உணர்த்துகிறது.

ஜல்லிக்கட்டு போராட்டத்தின் நோக்கம்

# உள்ளூர் முதல் உலகம் வரை
# தமிழர்களின் உணர்வுக்கட்டு

# உள்ளூர் முதல் உலகம் வரை தமிழர்களின் உணர்வுக்கட்டு




அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் டிரம்ப் பதவியேற்றுள்ளார்.அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாக மைக் பென்ஸ் பதவியேற்றுள்ளார்.

தனது ஆரம்ப உரையில், பராக் ஒபாமா மற்றும் அவரது மனைவி மிஷெல் ஒபாமா, ஆட்சி மாற்றத்தைக் கையாண்ட விதம் குறித்து பாராட்டினார். இந்த ஜனவரி 20 ஆம் திகதி, மக்கள் நாட்டின் ஆட்சியாளர்களாக மீண்டும் மாறிய




நாளாக நினைவு கூறப்படும் என்று அவர் தெரிவித்தார்.

தன்னை எதிர்நோக்கியுள்ள பணி சவால் நிறைந்தது என்று கூறிய ட்ரம்ப் , ஆனால் இந்த வேலையை செய்து முடிக்கப்போவதாகவும் உறுதியளித்தார். இன்றிலிருந்து ஒவ்வொரு முடிவும் அமெரிக்காவுக்கு முதலில் இலாபம் அளிக்கும் வகையிலேயே எடுக்கப்படும் என்றார் டிரம்ப்.

தற்போது சர்ச்சைக்குரிய இரண்டு உத்தரவுகளை பிறப்பித்தார்

பசுஃபிக் பிராந்திய வர்த்தக உடன்பாட்டை கைவிடுவது என டொனால்ட் டிரம்ப் எடுத்துள்ள முடிவு குறித்து சீனா வெளியிட்டுள்ள கருத்தில், வர்த்தம் மற்றும் வரிப் போட்டியில் யாரும் வெல்லப் போவதில்லை எனக் கூறியுள்ளது.

ஆனால் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகியவை அந்த ஒப்பந்தத்தை காப்பாற்ற முடியும் என நம்புகின்றன.

சீனாவும் இதர ஆசிய நாடுகளும் இதில் இணையவேண்டும் என அவை வலியுறுத்தியுள்ளன.



# அன்றே சொன்னார் அண்ணா

சட்டமன்றத்திற்குச் செல்லும் நமது தோழர்களுடைய பொறுப்புகள் மூன்று வகையானவையாகும்.

ஒன்று அங்கே நடைபெறக்கூடிய விதத்தை நாகரிகமானதாக ஆக்குவது; இரண்டாவது அவரவர்கள் அவரவர் தொகுதி நலன்களுக்கான காரியங்களைச் செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு; மூன்றாவது நமது தி.மு.கழகத்தின் அடிப்படைக் கோட்பாடுகளிலிருந்து வழுவாதிருப்பது.

வேகமாக ஓடுகிற குதிரையைக் கூடச் சவுக்கால் தட்டிக் கொடுக்கிறார்களே எதற்காக? மேலும் வேகமாக ஓடக்வடியது அந்தக் குதிரை என்பதினால்தான்!

அதேபோலத்தான் இன்று நம்மைப்பற்றிப் பேசும் கேலி மொழிகளும் நம்மை மேலும் வேகமாக ஓடக் செய்ய, அந்தச் சவுக்கடி போலப் பயன்பட வேண்டும்.

எனவே நமது வெற்றி சாதாரணமான சம்பவம் அல்ல; தமிழக அரசியல் வரலாற்றில் புதியதோர் கட்டம்; நாம் ஏற்றுக் கொண்டிருக்கும் புதிய பொறுப்பினை நாம் நன்கு உணர்வோம்.

தீவட்டிக்கும் டார்ச் விளக்கிற்கும், அரிவாளுக்கும் ஆப்பரேஷன் கத்திக்கும் உள்ள வேறுபாடு நமக்குத் தெரிந்தே இருக்கிறது. மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் சட்டசபையில் நாம் பணியாற்றுவோம்.

ஆளுங்கட்சி அடக்க ஒடுக்கமாக நடந்துகொண்டால் எதிர்க்கட்சியும் அவ்வாறே இருக்கும்.

ஏனோதானோ என்ற போக்கில் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று ஆளுங்கட்சி நடந்துகொண்டால், எதிர்க்கட்சியும் அதற்குத் தகுந்த மாதிரிதான் அமையும். சட்டசபையில் நல்ல விவாத உணர்ச்சியுடன் ஆளுங்கட்சியினர் நடந்து கொள்வார்களேயானால் நாமும் நமது பங்கினைக் கட்டாயம் சரிவரச் செலுத்துவோம்.

ஆளுங்கட்சியினர், தப்பித் தவறி நல்லது செய்தால் அவற்றிற்கு நிச்சயம் ஆதரவு தருவோம்: தவறான வழிச் சென்றால் கண்டிக்கத் தவறமாட்டோம். எதிர்க்கட்சியிலிருந்தாலும், வேறெந்தக் காரணத்திற்காகவும், நாங்கள் கழகத்தின் மூலாதாரமான இலட்சியத்தையும் கோட்பாடுகளையும் விட்டுவிடமாட்டோம் என்பதைத் திட்டவட்டமாக அறிவிக்க விரும்புகிறேன்.

கழகத் தோழர்களுக்கு நான் மீண்டும் கூறுவேன். நமது வெற்றி சாதாரணச் சம்பவம் அல்ல; நாம் பெரியதோர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். நம்மை இன்று மற்றவர்கள் ஆராய்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நமது தேர்தல் அனுபவங்கள் நமக்கு மேலும் வளர்ச்சியைத் தேடித்தரவும் பொறுப்போடு காரியமாற்றவும் நிச்சயம் பயன்படவேண்டும்.

# குழந்தைக்கு பிடித்த உணவை கொடுப்போம்!



## குழந்தை வளர்ப்பு
## தொடர் 5

சுட்டிக் குழந்தைகளின் குறும்பு, கரும்பாக இனிக்கும். ஆனால், சாப்பிடாமல் அவர்கள் பிடிக்கும் அடமோ... மிகமிக கசக்கும். அம்மாக்களுக்கு இருக்கும் சவால்களில் மிக முக்கியமானது, குழந்தைகளைச் சாப்பிட வைப்பதுதான். என் குழந்தை சாப்பிடவே மாட்டேங்குது... என்னதான் கஷ்டப்பட்டு சமைச்சுக் கொடுத்தாலும் வாயில வைக்க மாட்டேங்குது இப்படிப் புலம்பாத தாய்க்குலங்களின் எண்ணிக்கையை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

வளரும் குழந்தைகளுக்கு கார்போஹைட்ரேட், புரோட்டீன், விட்டமின், கால்சியம், இரும்புச் சத்து ஆகியவை அதிகம் தேவைப்படுகின்றன, இத்தகையச் சத்துள்ள உணவுகளைச் சரியாக கொடுக்காவிட்டால், குழந்தையின் ஐ. க்யூ வளர்ச்சி பாதிப்படையும் என்பது குழந்தைகள் நல ஆராய்ச்சியாளர்களின் கருத்து. இதைக் குறிவைத்தே... ரெடிமேட் உணவு வகைகள் பலவும் டப்பாக்களில் அடைத்து விற்கப்படுகின்றன. வாங்கி வெந்நீர்ல கலந்தா வேலை முஞ்சுது என்பதற்காக அவற்றை வாங்கி அடுக்கி வைப்பதுதான் பலருக்கும் வழக்கமாக இருக்கிறது. ஆனால், உங்கள் குழந்தைகள் விஷயத்தில் விளையாடலாமா? டப்பாக்களைவிட, நீங்களே சமைத்து, கையோடு ஃபிரெஷ்ஷாகக் கொடுக்கும் போதுதான், சத்துக்கள் யாவும் பூரண மாகக் குழந்தைகளுக்குப் போய்ச் சேரும் என்று சொல்லும் பத்மா, குழந்தைகளுக்கு ஆரோக்கியம் தருவதற்கென்றே காலகாலமாக பயன்படுத்தப்பட்டு வரும் உணவு வகைகளை தேடிப்பிடித்து செய்து பார்த்து இங்கே பட்டியலிட்டுள்ளார். குழந்தையுடன் உங்கள் உணவுத் திருவிழா தொடங்கட்டும்.

எதையாவது சமைத்துவிட்டு இதை சாப்பிடப் போறியா இல்லையா? என்று குழந்தைகளை மிரட்டுவதை மறந்துவிடுங்கள். நாளை அல்லது அடுத்த ஒரு வாரம் உங்கள் குழந்தைகள் எதை சாப்பிட விரும்புகிறார்கள் எனபதைக் கேட்டு சமைத்தால் அவர்கள் வேண்டாம் என்று சொல்ல வாய்ப்பு இருக்காது. அவர்கள் கேட்பதெல்லாம் சமைக்க நேரமில்லை என்றால் அவற்றை விடுமுறை நாட்களில் சமைப்பதாக கூறலாம்.

இந்த வம்பே வேண்டாம் என்று நினைப்பவர்கள் 2 அல்லது 3 உணவு வகைகளிலிருந்து ஒன்றை தேர்ந்தெடுக்கும்படி குழந்தைகளிடம் கேட்கலாம். குழந்தைகளிடையே எதை சாப்பிட வேண்டும் என்ற சண்டை ஏற்படலாம். அப்படி ஏற்படாமல் இருக்க குழந்தைகளிடையே உருவாகும் போட்டி யை தடுப்பது எப்படி என்று தெரிந்து கொள்ளுங்கள்.

**சமையலில் குழந்தைகள் உதவட்டும்**

நீங்கள் சமைக்கும்போது உங்கள் குழந்தைகளின் உதவியை நாடுங்கள். அவர்கள் வயதிற்கேற்ப சமையலில் உங்களுக்கு உதவும்படி கேட்டு கொள்ளுங்கள். பரிமாறும் போது, குழந்தை உதவியதை மறக்காமல் அனைவரிடமும் சொல்லுங்கள். நீங்களும் மற்ற குடும்பத்தினரும் குழந்தையைப் பாராட்டுங்கள். இப்போது குழந்தை முகம் சுளிக்காமல் சாப்பிடுவதைப் பாருங்கள்!

எம்.உஷா - குமாரபாளையம்



காலத்திற்கும் பொருந்தும்
கண்ணதாசன் சிந்தனைகள்

# ஆசையில்லையேல் குற்றங்கள் இல்லை!

வாழ்க்கை எதிலே ஓடிக் கொண்டிருக்கிறது. சராசரி மனிதனை ஆசைதான் இழுத்துச் செல்கிறது. அவன் தவறுக்கெல்லாம் அதுவே காரணமாகிறது. 'வேண்டும்' எக்கிற உள்ளம் விரிவடைந்து கொண்டே போகிறது. 'போதும்' என்ற மனம் சாகும்வரை வருவதில்லை. ஐம்பது காசு நாணயம் பூமியில் கிடந்து, ஒருவன் கைக்கு அது கிடைத்துவிட்டால், வழிநெடுக நாணயம் கிடைக்கும் என்று தேடிக்கொண்டே போகிறான். ஒரு விஷயம் கைக்கக் கிடைத்துவிட்டால் நூறு விஷயங்களை மனது வளர்த்துக் கொள்கிறது.

ஆசை எந்தக் கட்டத்தில் நின்றுவிடுகிறதோ அந்தக் கட்டத்தில் சுயதரிசனம் ஆரம்பமாகிறது. சுயதரிசனம் பூர்த்தியானவுடன், ஆண்டவன் தரிசனம் கண்ணுக்கு தெரிகிறது. ஆனாலும் எல்லோராலும் அது முடிகிறதா? லட்சத்தில் ஒருவனுக்கே ஆசையை அடக்கும் அல்லது ஒழிக்கும் மனப்பக்குவம் இருக்கிறது. என் ஆசை எப்படி வளர்ந்ததென்று எனக்கே நன்றாகத் தெரிகிறது. சிறு வயதில் வேலையின்றி அலைந்தபோது 'மாதம் இருபது ரூபாயாவது கிடைக்கக்கூடிய வேலை கிடைக்காதா' என்று ஏங்கினேன். கொஞ்ச நாளில் கிடைத்தது. மாதம் இருபத்தைந்து ரூபாய் சம்பளத்திலே ஒரு பத்திரிகையில் வேலை கிடைத்தது. ஆறு மாதம்தான் அந்த நிம்மதி.

'மாதம் ஐம்பது ரூபாய் கிடைக்காதா?' என்று மனம் ஏங்கிற்று. அதுவும் கிடைத்தது. வேறொரு பத்திரிகையில். பிறகு மாதம் நூறு ரூபாயை மனது அவாவிற்று. அதுவும் கிடைத்தது. மனது ஐநூறுக்கு தாவிற்று. அது ஆயிரமாக வளர்ந்தது. ஈராயிரமாகப் பெருகிற்று. யாவும் கிடைத்தன. இப்பொழுது நோட்டடிக்கும் உரிமையையே மனது கேட்கும் போலிருக்கிறது.!

எந்தக் கட்டத்திலும் ஆசை பூர்த்தியடையவில்லை. இவ்வளவு போதும் என்று எண்ணுகிற நெஞ்சு, அவ்வளவு கிடைத்ததும், அடுத்த கட்டத்திற்குத் தாண்டுகிறதே, ஏன்?

அதுதான் இறைவன் லீலை!

ஆசைகள் அற்ற இடத்தில், குற்றங்கள் அற்றுப் போகின்றன. குற்றங்களும், பாவங்களும் அற்றுப்போய்விட்டால் மனிதனுக்கு அனுபவங்கள் இல்லாமற் போய்விடுகின்றன.

அனுபவங்கள் இல்லையென்றால், நன்மை தீமைகளைக் கண்டுபிடிக்க முடியாது. ஆகவே தவறுகளின் மூலமே மனிதன் உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, இறைவன் ஆசையைத் தூண்டுவிடுகின்றன.

ஆசையை மூன்றுவிதமாகப் பிரிக்கிறது இந்த மதம்.

மண்ணாசை! பொன்னாசை! பெண்ணாசை!

மண்ணாசை வளர்ந்து விட்டால், கொலை விழுகிறது. பொன்னாசை வளர்ந்து விட்டால், களவு நடக்கிறது. பெண்ணாசை வளர்ந்துவிட்டால், பாவம் நிகழ்கிறது. இந்த மூன்றில் ஓர் ஆசைகூட இல்லாத மனிதர்கள் மிகவும் குறைவு. அகவேதான், பற்றற்ற வாழ்க்கையை இந்துமதம் போதித்தது. பற்றற்று வாழ்வதென்றால், எல்லாவற்றையும் விட்டு விட்டு ஓடிப்போய் சந்நியாசி ஆவதல்ல!

"இருப்பது போதும்; வருவது வரட்டும்; போவது போகட்டும்; மிஞ்சுவது மிஞ்சட்டும்" என்று சலனங்களுக்கு ஆட்படாமலிப்பதே பற்றற்ற வாழ்க்கையாகும்.

ஆசை, தீமைக்கு அடிப்படையாக இல்லாதவரை, அந்த ஆசை வாழ்வில் இருக்கலாம் என்கிறது இந்து மதம். நான் சிறைச்சாலையில் இருந்தபோது கவனித்தேன். அங்கே இருந்த குற்றவாளிகளில் பெரும்பாலோர் ஆசைக் குற்றவாளிகளே. இந்த மூன்று ஆசைகளில் ஒன்று அவனைக் குற்றவாளியாக்குகிறது. சிறைச்சாலையில் இருந்துகொண்டு, அவன் "முருகா, முருகா" என்று கதறுகிறான்.

ஆம், அவன் அனுபவம் அவனுக்கு உண்மையை உணர்த்துகிறது. அதனால்தான், "பரம்பொருள் மீது பற்று வை; நிறையற்ற பொருள்களின் மீது ஆசை வராது" என்கிறது இந்துமதம்.



மாதம் ஒரு ஆலயம்

# காரைக்கால் அம்மையார் தலைகீழாக நடந்து வழிபட்ட தலம்

சென்னையில் இருந்து அரக்கோணம் செல்லும் வழியில் அமைந்திருக்கும் திருவாலங்காடு என்ற ஊரில் கோயில் கொண்டுள்ளார் வடாரண்யேஸ்வரர். இங்குள்ள அம்மன் வண்டார்குழனி என்ற திருநாமத்துடன் விளங்குகிறார்.

12ம் நூற்றாண்டில் சோழ மன்னரால் கட்டப்பட்ட இந்த கோயில், சிவன் நடனமாடியபோது, அவரது அணிகலன்கள் பூமியின் 5 இடங்களில் விழுந்தன. அவற்றை 1. ரத்ன சபை, 2. கனக சபை, 3. ராஜாத சபை, 4. சித்ர சபை, 5. தாமிர சபைகள் என்று அழைப்பர். அதில் திருவாலங்காடு வடாரண்யேஸ்வரர் தலம் முதலாவது ரத்ன சபையாக திகழ்கிறது. இது பாடல் பெற்ற தலமாகவும் விளங்குகிறது. காரைக்கால் அம்மையார் தனது மூத்த திருப்பதிகத்தை இத்தலத்தில் தான் பாடியுள்ளார்.

திருவாலங்காடு ரயில் நிலையத்தில் இருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் உள்ள இந்த கோயிலுக்குச் செல்லும் வழி பெரும்பாலும் ஆட்கள் நடமாட்டமே இல்லாத பகுதியாகவே இருக்கிறது. அதையும் தாண்டி கோயில் இருக்கும் பகுதியில் தான் சிறிய கிராமம் உள்ளது.

கோயில் கோபுரத்தை கடந்ததும், அங்கும் உள் கோயிலைச் சுற்றி விசாலமான இடம் உள்ளது. வலது பக்கம் வண்டார்குழலி அம்மனும், இடது பக்கத்தில் மண்டபம் போன்ற அமைப்பும் உள்ளது. அதையும் கடந்து உள்ளே செல்லும் போது அதற்குள்ளும் மிக உயரமான தளத்துடன் கூடிய மண்டபம், மற்றும் ஏராளமான இறைவனின் சிலைகள், லிங்கங்கள் காட்சியளிக்கின்றன. அங்குள்ள மண்டபத்தின் தூண்கள் அழகான வேலைபாடுடன் காட்சியளிக்கின்றன.

அங்கு நேரெதிரே வடாரண்யேஸ்வரர் வெள்ளி கிரீடத்துடன் நமக்கு அருள் பாலிக்கிறார். கருவறை வாயிலில் பால துவாரகர்கள் கம்பீரமாக வீற்றிருக்கின்றனர். மனதுக்கு அமைதியும், கண்களுக்கு விருந்தாகவும் காட்சி அளிக்கிறார் வடாரண்யேஸ்வரர். அவர்து உருவம் நமது மனக்கண்களில் நீங்காது நிலை பெற்று விடுகிறது. வடாரண்யேஸ்வரரை வணங்கிவிட்டு இடது பக்கமாக கருவறையில் இருந்து வெளியே வந்ததும், சப்தா மாதாக்கள், தட்சிணாமூர்த்தி, கைலாசநாதர், சிவன், பிள்ளையார் என பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றனர். இங்கு பல சிறப்பு வாய்ந்த சிவலிங்கங்களும் வீற்றிருக்கின்றன. ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த கோயிலாக இருந்தாலும், புதிதாக கட்டிய கோயிலைப் போன்று கோயில் வளாகம் காட்சி அளிப்பது பிரம்மிப்பை ஏற்படுத்துகிறது.

அதில் மாந்தீஸ்வரர் என்ற சிறப்பு வாய்ந்த சிவலிங்கம் இந்த கோயிலில் அமைந்திருப்பது மிகவும் குறிப்பிடத்தக்க விஷயமாகும். ஜென்ம சனி, ஏழரை சனி, அஷ்டமத்து சனி, அஷ்டாமத்து சனி போன்ற கிரகநிலை இருப்போர், மாந்தீஸ்வரரை வணங்கினால் நலம் பெறலாம் என்று கோயிலில் உள்ள குறிப்பு நமக்கு சொல்கிறது. இந்த திருத்தலம் பரணி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் வணங்க வேண்டிய தலமாகவும் உள்ளது. இந்த கோயில் திருத்தணி முருகன் கோயிலுடன் இணைந்துள்ள கோயிலாகும்.

**இந்த தலத்தின் பின்பக்கம் வலது மூலையில் கோயிலின் தல விருட்சமான மிகப்பெரிய ஆலமரம் வீற்றிருக்கிறது. மேலும் காரைக்கால் அம்மையார் தலைகீழாக நடந்து வந்து இறைவனை வழிபட்ட தலமாகும். இத்தகைய பெருமை வாய்ந்த இத்தலத்துக்கு நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து பக்தர்கள் வழிபட வருகின்றனர்.**


மார்கழி திருவாதிரை, பங்குனி உத்திரம் போன்றவை இங்கு சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

அதுமட்டும் அல்லாமல், சிவராத்திரி, பிரதோஷம் போன்ற நாட்களிலும் இங்கு சிறப்பு பூஜைகள் செய்யப்படுகின்றன. கோயில் நடை காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை திறந்திருக்கும்.

**கோயிலுக்கு செல்லும் வழி :** சென்னை அரக்கோணம் ரயில் மார்கத்தில் அரக்கோணத்துக்கு முன்பிருக்கும் திருவாலங்காடு ரயில் நிலையத்தில் இறங்கி சுமார் 5 கி.மீ. தொலைவில் இந்த கோயில் அமைந்துள்ளது. ரயில் நிலையத்துக்கு மிக அருகே ஏராளமான ஷேர் ஆட்டோக்களும் இயக்கப்படுகின்றன. எப்போதாவது வரும் ஒரு பேருந்தை தவிர, ஆட்டோ ஒன்றுதான் கோயிலையும், ரயில் நிலையத்தையும் இணைப்பதற்கான வழி. இது தவிர, சொந்த வாகனத்தில் செல்வோர் தேசிய நெடுஞ்சாலை 205 ல் (சென்னை ஆவடி திருவள்ளூர் ரேணிகுண்டா வழி) சென்றால் இக்கோயிலை அடையலாம்.

பேருந்து மார்கமாக செல்ல வேண்டும் என்றால், தாம்பரம் அல்லது ஆவடியில் இருந்து திருவள்ளூர் சென்று அங்கிருந்து அரக்கோணம் செல்லும் பேருந்தில் செல்லலாம். அதே போல அரக்கோணத்தில் இருந்து திருவள்ளூர் செல்லும் சில பேருந்துகள் திருவாலங்காடு வழியாகவும் இயக்கப்படுகின்றன. குறிப்பாக காலை மற்றும் மாலையில் ஒரு அரசுப் பேருந்து ரயில் நிலையத்தில் இருந்து கோயிலுக்கு வந்து செல்கிறது.

# கண்டுபிடிங்க...




கேள்விக்குறியிட்ட இடத்தில்
என்ன வரும் என்பதை எழுதி அனுப்புங்கள்



**S. SURYA**
**VII-B**
**SHERWOOD HALL SENIOR SEC. SCHOOL, CHENNAI**

# கைவண்ணம்





**S.JANAKI**
**STD IX-A,**
**GOOD SHEPHERED M.H.S.SCHOOL**
**CHENNAI**

## மித்ரா டைம்ஸ்

**சந்தாதாரர் ஆகுங்கள்!**

சந்தா விபரம்

சந்தா ரூ.240/- மூன்று ஆண்டு சந்தா ரூ.720/- 5 ஆண்டு சந்தா ரூ.1200/- ஆயுள் சந்தா ரூ.5000/- புரவலர் சந்தா ரூ.10.000/-

அலுவலக முகவரி

501, சுருதி பிளாக், சித்ரா அவென்யூ, 9 சூளைமேடு ஹைரோடு, சென்னை-94

Ph : 044 23743007/8 www.mitratimes.com Whatsapp No : 8248585067

download mitratimes app


# பிப்ரவரி மாத ராசிப்பலன்




வளைந்து கொடுக்கத் தெரியாததால் சில வாய்ப்புகளை நழுவ விட்டவர்களே! நெற்றியடியாகப் பேசும் நீங்கள், அன்பு காட்டினால் அடிபணிந்து வருவீர்கள். குருபகவான் இனி 7ல் அமர்ந்து உங்களை பார்க்கயிருப்பதால் உங்களுடைய திறமைக்கு அங்கிகாரம் கிடைக்கும். முக்கிய முடிவுகள் எடுத்து செயல்படுவீர்கள். நல்லவர்களின் நட்பு கிடைக்கும். **திருவாரூர் தியாகராஜரை தரிசித்து வாருங்கள். பசுவிற்கு அகத்திக்கீரை கொடுங்கள்.**




நெற்றியில் சுருக்கம் விழுந்தாலும் இதயத்தை இளமையாக வைத்திருப்பவர்களே! பணப்பற்றைவிட, நாட்டுப் பற்று, மொழிப் பற்று அதிகமுள்ளவர்களே! செல்வாக்கு கூடும். உடல் நலத்தில் அக்கறை வேண்டும்.எதிர்பார்த்த வகையில் பணம் வரும். காதல் விவகாரத்தை தள்ளி வைத்துவிட்டு உயர்கல்வியில் கவனம் செலுத்துங்கள். **திருத்தணி முருகப் பெருமானை தரிசித்து வாருங்கள். கோயில் உழவாரப் பணியை மேற்கொள்ளுங்கள்.**




நெருக்கடி நேரத்திலும் நெதன்னம்பிக்கை தளராதவர்களே! குருபகவான் அருளால் இனி புதிய சிந்தனைகள் மனதில் உதயமாகும். மகளுக்கு திருமணம் நிச்சயமாகும். கல்யாணம் கூடி வரும். போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவீர்கள். புதுவேலை அமையும். **சென்னை, திருமுல்லைவாயில் தலத்தில் அருள்பாலிக்கும் பச்சையம்மனை தரிசித்து வாருங்கள். ஏழைகளின் கல்விச் செலவை ஏற்றுக் கொள்ளுங்கள்.**




முயன்றால் முடியாதது மு எதுவுமில்லை என்பதை நிரூபித்துக் காட்டுபவர்களே! செவ்வாய் 9ம் வீட்டில் அமர்வதால் தடைகளும், போராட்டங்களும் விலகும். புதுவேலை அமையும். பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். பழைய கடனைப்பற்றி யோசிப்பீர்கள். **திருவள்ளூருக்கு அருகேயுள்ள திருவூர் எனும் ஊரில் அருள்பாலிக்கும் உத்பலாம்பாள் சமேத சிங்கீஸ்வரரை தரிசித்து வாருங்கள். தந்தையிழந்த பிள்ளைகளுக்கு இயன்ற உதவிகளைச் செய்யுங்கள்.**




எப்போதும் லட்சியத்தை விட்டு விலகாதவர்களே! உங்கள் ராசி நாதன் இந்த மாதம் முழுக்க நீடிப்பதால் சவாலான காரியங்களையும் எளிதாக முடித்துக் காட்டுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களால் உதவிகள் கிடைக்கும்.

**காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாளை தரிசித்து வாருங்கள். மரக்கன்று நட்டுபராமரியுங்கள்.**




பனியா, வெயிலா என்று பார்க்காமல் என்கடன் பணி செய்து கிடப்பதே என்று இடைவிடாமல் உழைப்பவர்களே! குருபகவான் இனி ராசிக்கு தன ஸ்தானமான 2ல் அமர்வதால் பணவரவு உண்டு. வீட்டில் தடைபட்டு வந்த சுப நிகழ்ச்சிகளெல்லாம் அடுத்தடுத்து நடந்தேறும். **உங்கள் ஊருக்கு அருகேயுள்ள ஐயப்பன் கோயிலுக்குச் சென்று வாருங்கள். முதியோர் இல்லத்திற்குச் சென்று இயன்ற உதவிகளைச் செய்யுங்கள்.**




யாருக்கும் அஞ்சாமல் அடிமனதில் என்ன தோன்றுகிறதோ அதை அப்படியே செய்து சாதிப்பவர்களே! புதிய வாய்ப்புகளும் தேடி வரும். பிரபலங்களுக்கும் நெருக்கமாவீர்கள். நடைபயிற்சி மேற்கொள்ளுங்கள். உணவில் கவனம் செலுத்துங்கள். **திருவள்ளூர், அரக்கோணத்திற்கு அருகேயுள்ள சோளிங்கர் யோக நரசிம்மரை தரிசித்து வாருங்கள். வயதானவர்களுக்கு கம்பளி வாங்கிக் கொடுங்கள்.**




பிறரை மகிழ்வித்து மகிழ்பவர்களே! எதிர்பாராத வகையில் பணம் வரும். ஷேர் மூலமாகவும் ஆதாயமடைவீர்கள். மனைவி ஆதரவாகப் பேசுவார். வீராவேசமாக பேசி விமர்சனங்களுக்குள்ளாவதை விட கனிவாகப் பேசி எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பதுதான் நல்லது என்ற முடிவுக்கு வருவீர்கள். **திருவண்ணாமலை பகவான் ரமண மகரிஷி ஆசிரமத்திற்குச் சென்று தரிசித்து வாருங்கள். அன்னதானம் செய்யுங்கள்.**




பூவைப்போல் புன்சிரிப்பும் மெல்லிய மனசும் கொண்ட நீங்கள் சில நேரங்களில் புயலாகச் சீறிப் பாய்ந்து புரட்சி செய்வீர்கள். ராஜதந்திரிகளான நீங்கள் சமயோஜித புத்தியால் சாதிப்பவர்கள். முன்கோபம் விலகும். கண்வலி வந்து நீங்கும். **கும்பகோணத்தில் அமைந்துள்ள மௌனசுவாமி மடம் சென்று அமைதியாக அமர்ந்து வாருங்கள். கட்டிடத் தொழிலாளிக்கு உதவுங்கள்.**




அதிகாரப் பதவி வந்தாலும் ஆணவப்படாமல் அடக்கமாக சாதிப்பவர்களே! துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். சொத்து வாங்குவது, விற்பது சுலபமாக முடியும். செலவுகளை சமாளிக்கும் சக்தி உண்டாகும். **திருச்சி சமயபுரம் மாரியம்மனை தரிசித்து வாருங்கள். அனாதை இல்லங்களுக்கு உங்களால் இயன்ற உதவியைச் செய்யுங்கள்.**




கடமை உணர்வு கொண்ட நீங்கள் காதல் வசப்படுபவர்கள். பிறர் தன்னை குற்றம் குறை கூறி குதர்க்கமாகப் பேசினாலும் மனம் தளரமாட்டீர்கள். கடந்த கால அனுபவங்களை மறக்காமல் வருங்காலத்தை வளமாக்கிக் கொள்வதில் வல்லவர்கள் நீங்கள்தான். **வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி பாதையிலுள்ள தகட்டூர் காசி பைரவரை தரிசித்து வாருங்கள். கோயில்களுக்கு விளக்கெரிக்க எண்ணெய் வாங்கிக் கொடுங்கள்.**




மூடநம்பிக்கைகளில் மூழ்காமல் அறிவுப் பூர்வமாக சிந்திப்பவர்களே! ஓயாமல் உழைக்க வேண்டியிருக்கும். குடும்பத்ினருடன் செலவிடக்கூடிய நேரம் குறையும். திடீர்திடீரென்று கோபப்படுவீர்கள். மற்றவர்களை உங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து ஏங்க வேண்டாம். **கும்பகோணம் அருகேயுள்ள அய்யாவாடி பிரத்யங்கரா தேவியை தரிசித்து வாருங்கள். ஏழைகளின் கல்விச் செலவை ஏற்றுக் கொள்ளுங்கள்.**

**செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் வளர்பிறை, தேய்பிறை எதுவானாலும் செவ்வாய்கிழமைகளில் விரதம் இருந்து விநாயகரை பூஜித்தால் தோஷம் நீங்கும்.**

# கட்டுமானத் தொழில் நிமிர்ந்துள்ளதா?

கடந்த 2016 செப்டம்பர் 9 அன்று, விளை நிலங்களை வீட்டடி மனைகளாக மாற்றக் கூடாது என சென்னை உயர்நீதிமன்றம் தடைவிதித்தது. இந்த வழக்கு வழக்கம்போல் வாய்தா மேல் வாய்தா வாங்கி 2017 ஜனவரி 30 ஆம் நாள் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் மீண்டும் விசாரணைக்கு வருகிறது. 120 நாட்களுக்கும் மேலான தடையாணையால் பத்திரப் பதிவகங்கள் வெறுமனே திறந்து மூடப்படுகின்றன. ஒரு பத்திரமும் பதிவாகவில்லை.

பதிவுத் தடையால் வீடு, மனைகளை வாங்க விற்க முடியவில்லை. கட்டுமானங்கள் நின்றுவிட்டன.

கட்டுமானங்கள் நின்றுவிட்டதால் கட்டுமானத் தொழிலாளர்களின் வீடுகளில் அடுப்புகள் அணைந்துவிட்டன. வறுமையின் பிடியில் சிக்கியிருக்கிறார்கள். வறுமை முதலில் தருவது அவமானம். அடுத்தடுத்து நோய், மரணம்.

கட்டுமானத் தொழிலாளர் எனில் இடம் விற்பவர் வாங்குபவரில் தொடங்கி கொத்தனார், சித்தாள், நிமிர்ந்தாள், கம்பி கட்டுவோர், பலகையடிப்போர், கல்பதிப்பவர், சுண்ணமடிப்பவர், சுமைப் பணியாளர், சுமையுந்து ஓட்டுநர், செங்கல் கிரசர் பணியாளர், சிமிண்ட் சுண்ணாம்பு உற்பத்தித் தொழிலாளர், இரும்பு குழாய், கண்ணாடி விற்பவர் என பட்டியல் நீளும். ஆக நேரடியாக மறைமுகமாக கோடிக்கணக்கானோர்



பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் இத்தடையாணையால்...!

அடுத்ததாக அங்கீகாரம் இல்லாத மனைப்பிரிவுகளுக்கு தடை என்பதாகும். அங்கீகாரத்தின் வரைமுறைகள் முன்னர் செய்யப்பட்டது. அதில் மாற்றம் வேண்டும். 2400 சதுர அடி அங்கீகரிக்கப்பட்ட மனை வாங்கி வீடு கட்டினால் சென்னை போன்ற பெருநகரங்களில் ரூபாய் ஒரு கோடியைத் தாண்டும். பிற மாநகரப் பகுதிகளில் 60லட்சத்திற்கும் மேலாகும் மற்றும் 1200 சதுர அடி மனை 40x30 என வாங்கினால் வெறும் 500 சதுர அடி கட்டிடம் கட்ட அனுமதிக்கின்றனர். 700 சதுர அடியை மனையின் முன்புறம் இருபுறங்களிலும் தலா 5 அடியும் மனையின் பின்புறத்தில் 10 அடியும் காலியாக விட்டுவிடச் சொல்கின்றனர்.

இன்றைய மக்கள் பெருக்கத்திலும் இடப்பற்றாக்குறையிலும் இது சாத்தியமா?

உங்கள் சுகாதாரத்திற்காகத்தான் இந்த ஏற்பாடு என்று அரசு கூறினாலும் ஏழை, எளிய நடுத்தர மக்களால் இதுபோன்று அதிக தொகை செலவழித்து வீடுகள் கட்ட இயலுமா? அரசு கண்மாய் புறம்போக்குகளில் மனைப்பிரிவு செய்யும்போது 2 மீட்டர் சாலை அமைக்கிறது. 3/4 செண்ட்டுகளில் வீடுகட்ட அனுமதித்து விற்பனை செய்கிறது. மேலும் நேரு வீட்டு வசதி திட்டம். பசுமைக்குடில்கள் திட்டத்தின்கீழ் அமையும் வீடுகளை அரசு தரும் ரூபாய் 90 ஆயிரம், 1,85,000ல் கட்ட முடியுமா? அங்கீகாரம்தான் பெறமுடியுமா? அடுக்குமாடி குடியிருப்புகளைச் சுற்றி இடமிருக்கலாம். வீட்டைப் பிரிப்பது 4½ அங்குல சுவர்தானே அங்கீகாரம் பெறுவதற்கு மனைப்பிரிவு செய்பவர்கள் 20 சதவீத இடத்தை பொதுப் பயன்பாட்டிற்கு விட்டுவிடுவதும் தேவையில்லா இடங்களில் சாலைகளை மிக அகலமாக போடுவதும், விலையேற்றத்திற்கான காரணங்களில் ஒன்றாகிறது. மேலும் அங்கீகாரம் பெற்று வீடு கட்டுவதற்குள் மனையிடமாக, பத்திரம் செய்ய, அதை அங்கீகாரம் செய்ய, அதில் வீடுகட்ட, வரைபட அனுமதி பெற, பொட்டல் வரி, பாதாளச் சாக்கடை வரி, மின்சாரத்திற்கான டெபாசிட் என பல வகையான தலைப்புகளில் அரசுக்கு ஒரு வீடு கட்டுபவர் ஏறக்குறைய ரூபாய் 30லட்சம் செலுத்த வேண்டி வருகிறது.

ஒரு மனைப்பிரிவில் 100 வீடுகள் அமைத்தால் அரசு ரூபாய் மூன்று கோடி பெற்றுக் கொண்டு, வீடுகள் முடிக்கப்பட்டு பத்து ஆண்டுகள் ஆன பிறகும் 2ஆயிரம் ரூபாய்க்கு கூட ஒரு லோடு கிணற்று மணல் அடித்து சாலை போடவோ ஒரே ஒரு சாலையில் மின்விளக்கு கூட போடுவதில்லை.

அத்தனை பணமும் எங்கு போகிறது? அங்கீகாரம் பெறப்படும் இடங்களில் லஞ்சமும் ஊழலும் அலைக்கழிப்புகளும், அலட்சியங்களும் தாண்டவமாடுகின்றன.

விளைநிலங்களை பாதுகாப்பது என்பதில் எவருக்கும் மாறுபாடான கருத்து இருக்க வாய்ப்பில்லை. உணவின்றி நாம் எப்படி உயிர்ப்பிழைத்திருக்க முடியும்? அப்படியெனில் விளைநிலங்களைப் பாதுகாக்க அரசு என்ன செய்ய வேண்டும்? விவசாயிக்கு தேவையான வசதிகள் செய்து தர வேண்டும். நீர்நிலைகளை உருவாக்க வேண்டும். நீர் வழித்தடங்களை புதுப்பிக்க வேண்டும். புதிதாய் உருவாக்க வேண்டும். இடுபொருட்களின் விலைகளை குறைக்க வேண்டும். விளைபொருட்களுக்கு விலையை உயர்த்தித் தர வேண்டும். தவிர்க்க முடியாத காரணங்களால் விவசாயி தனது நிலத்தை விற்றால் விற்பதை எப்படி தடுப்பது? அது அவரது உரிமை.

வாங்குபவர் விவசாயியாக இல்லாத போது அந்நிலம் பாழ்படுகிறது. விளைநிலம் வேற்றுரு கொள்கிறது. அதை அரசு தடுத்தாட்கொள்ள வேண்டும். லெவியில் நெல் வாங்குவது போல் அரசே நிலங்களை வாங்கி மேம்படுத்தி கூட்டுப் பண்ணைகளை ஏற்படுத்த வேண்டும். தரிசு நிலங்களை மேம்படுத்த வேண்டும். விளைநிலங்கள் அரசு வசம் சேரும் தருவாயில் அரசு மக்களுக்கு சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டும். என்னவெனில் விளைநிலங்களை விளைநிலங்களாகவே அரசு நீட்டிப்பு செய்யும்; பன்னாட்டு முதலாளிகளுக்கு எந்த உபயோகத்திற்காகவும் குத்தகைக்கோ, விலைக்கோ தரமாட்டோம். அவர்களிடம் இடுபொருட்கள் வாங்கமாட்டோம். அவர்களிடம் மொத்தமாய் விளைபொருட்களை விற்கமாட்டோம் என்று. உணவு என்பது உயிர்; இருப்பிடம் என்பது நமது உரிமை...

ஒவ்வொரு இந்தியனின் ஆகப்பெரிய இலக்காய் வாழ்நாளில் கொள்வது சொந்த வீட்டில் வாழ்வது. ஏனெனில் வாடகை வீட்டில் வாழ்வது என்பது சிறையினுள் இருப்பது போன்றது. காம்பவுண்ட் வீடுகளில் இருப்பது நரகத்திற்கு சமம்... எனவே விளைநிலங்கள் பாதிக்கப்படாமல் குடியிருப்புப் பகுதிகளை கண்டறிந்து நடைமுறைக்கு சாத்தியமுள்ள அங்கீகாரங்களை கொடுத்து மக்களை நிம்மதியாய் தமிழக அரசு வாழ விடுமா என்ற கேள்வி எழுகிறது.

வீடுகள், பதிவு செய்யப்பட்ட வீட்டடி மனைகள், ஏற்கனவே மனைப்பிரிவு செய்யப்பட்ட இடங்கள், மனைப்பிரிவு செய்யப்பட்டதில் பாதி விற்று மீதி விற்காத மனையிடங்களை உடனடி பதிவு நடத்திட வழி செய்யுங்கள். தினம் ஒரு அறிவிப்பு, வாரம் ஒரு சுற்றறிக்கை, மாதம் இரு அரசாணை என ஒவ்வொரு துறையினரும் மக்களை குழப்புகின்றனர்.

# தங்க நகை வாங்கும் போது கவனிக்க வேண்டியது

**பெண்கள் தங்க ஆபரணங்கள் வாங்கும்போது கட்டாயம் சில விஷயங்களைக் கவனிக்க வேண்டும்.**

- ஹால்மார்க் தரச்சான்று பெற்ற நகைகளை வாங்குவது முக்கியம். அந்த நகைகளிலும் 5 முக்கியமான விஷயங்களை கவனிக்க வேண்டும்.
- நகை எந்த ஆண்டு தயாரிக்கப்பட்டது என்பதைக் குறிக்கும் வகையில் ஆபரணத்தில் மேல் ஏ,பி,சி,ஈ உள்ளிட்ட எழுத்துக்கள் அச்சிடப்பட்டிருக்கும். இதன் மூலம் மெருகேற்றி விற்கப்படும் பழைய நகைகளை வாங்காமல் தவிர்க்கலாம்.
- நகையை யார் உற்பத்தி செய்தார்கள், எந்த விற்பனையாளர் விற்கிறார் என்பது குறித்த சீல் ஆபரணத்தின் மேல் இருக்கும். இதன் மூலம் சட்டவிரோதமாகக் கொண்டு வரப்படும் நகைகளை வாங்கி ஏமாறுவதைத் தவிர்க்க முடியும்.
- ஹால்மார்க் தரச்சான்று அளித்த பரிசோதனைக் கூடத்தினை அடையாளப்படுத்தும் வகையில் ஒரு குறியீடு நகையின் மேல் அச்சிடப்பட்டிருக்கும். இதைக் கொண்டு எந்த இடத்தில் நகைக்கு தரச்சான்று வழங்கப்பட்டது என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும்.
- அனைத்து ஹால்மார்க் நகைகளும் 22 காரட் (91.6 சதவீதம்) தங்கம் சேர்க்கப்பட்ட நகைகளாக இருக்கும் என கருதக் கூடாது. ஹால்மார்க் என்பது தரத்துக்கு வழங்கப்படும் சான்றிதழ் மட்டுமே.
- எனவே 18 காரட், 20 காரட் என எந்த மதிப்பிலான தங்கத்திற்கும் ஹால்மார்க் தரச்சான்று பெற முடியும். வாடிக்கையாளர்கள் தங்க ஆபரணங்கள் வாங்கும் போது 22 காரட் என நகையின் மேல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை சரி பார்ப்பது வாங்க வேண்டியது மிகவும் அவசியம்.
- ஹால்மார்க் தரச்சான்று பெற்ற நகைகள் என்பதைக் குறிக்கும் முக்கோண வடிவிலான குறியீடு நகையின் மேல் அச்சிடப்பட்டிருக்கும். அதை உறுதி செய்த பின்னரே வாடிக்கையாளர்கள் நகைகளை வாங்க வேண்டும்.
- வாடிக்கையாளர்கள் வாங்கிச் செல்லும் ஹால்மார்க் தரச்சான்று பெற்ற நகைகளில் ஏதேனும் குறைபாடு கண்டறியப்பட்டால் விற்பனையாளர் மற்றும் பரிசோதகர் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்க முடியும்.
- பெண்கள் நகைகள் வாங்கிவிட்டு சில நூறுகளை சேமிப்பதற்காக ரசீது வாங்குவதில்லை. தங்க நகைகளைப் பொருத்த வரையில் 1 சதவீதம் மட்டுமே விற்பனை வரியாக வசூலிக்கப்படுகிறது. உதாரணத்துக்கு ஒரு பவுன் நகை வாங்கினால் வாடிக்கையாளர்கள் ரூ.220 மட்டுமே வரியாக செலுத்த வேண்டும். அதை சேமிப்பதற்காக நாம் ரசீதின்றி நகை வாங்கக் கூடாது.

சினி

## ிமா ே

ஏ

பதி

ம்

ில்கள்

பால்... அதிக பால்... என ஆசைப்பட்டு, வெளிநாட்டு இனப் பசுக்களையும்ஞ் கலப்பினப் பசுக்களையும் தேடி ஓட ஆரம்பித்ததில், நம் நாட்டு இனப் பசுக்களை பலரும் மறந்தே விட்டார்கள். தற்போது, இயற்கை விவசாயம் மீது உள்ள ஆர்வத்தால், பெரும்பாலானோர் நாட்டுப் பசுக்களைத் தேடி வாங்கி வளர்க்க ஆரம்பித்துள்ளனர்.

தமிழகத்தைச் சேர்ந்தப் பாரம்பரிய பசுக்களோடு, வடமாநில இனங்களான சாஹிவால், தார்பார்க்கர், கிர், காங்கிரேஜ்ஞ் போன்ற பசுக்களையும், முர்ரா ரக எருமைகளையும் வளர்த்து வருகின்றனர்.

‘வெறுமனே இடுபொருளுக்காக மட்டும் இல்லாம, பால் விற்பனையும் செஞ்சா லாபகரத்திற்காகவும் மாடுகளை வளர்க்கின்றனர். பெரும்பாலும் வீடுகளில் காங்கேயம் மாடு வகைகளை வளக்கின்றனர். காங்கேயம் பசுக்களை மட்டும் வெச்சு பால் உற்பத்தியை அதிகப்படுத்த

ஆரம்பத்துல பசு மாடுகளை மட்டும்தான் பாலுக்கு பயன்படுத்தி வந்தனர். சிலர், ‘எருமைப்பால்ல கொழுப்புச் சத்து அதிகம் இருக்கும். அதனால பாலுக்கு நல்ல விலை கிடைக்கும் என்கின்றனர். எருமைப் பாலிலும் அதிக சத்துக்கள் நிறைந்துள்ளன. எருமை மாடு, பசுந்தீவனம், அடர்தீவனம் எல்லாத்தையும் கழிக்காமத் திங்கும். அதுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகமா இருக்கறதால, மருத்துவச் செலவும் குறைவு.

இப்போ, நாட்டுப் பசுக்களோட பாலுக்கு அதிக





# நன்மை தரும் நாட்டு மாடுகள்

முடியாது. அதே நேரத்துல, கலப்பினப் பசுக்களை வாங்கி பால் உற்பத்தியை அதிகரித்தால் தரம் குறைந்துவிடும் என்பதில் கிராம விவசாயிகள் கவனமாக இருக்காங்க.

‘கலப்பினப் பசுக்களைப் போலவே அதிகம் பால் கறக்குற நாட்டுப் பசுக்களும் இருக்குறது நிறை பேருக்கு தெரியறது இல்ல.

நல்ல காற்றோட்டத்துடன் சிமெண்ட் தரைதளத்துடன் இருந்த தொழுவத்தில் ஒரு வரிசையில் பசுமாடுகளும் எதிர் வரிசையில் எருமை மாடுகளும் வளர்க்கலாம். தொழுவத்தில் நடந்து கொண்டே பேசகின்ற அளவுக்கு சுத்தமாகவும் சுகாதாரமாகவும் கிராமத்து ஆளுங்க வைச்சிருக்காங்க.

தேவை இருக்கறதால நாட்டு மாடுகளை வளர்த்து பாலை நேரடி விற்பனை செஞ்சா கண்டிப்பா நல்ல லாபம் பாக்க முடியும்” என்று அடித்து சொல்கின்றனர் நாட்டு வளர்ப்பு விவசாயிகள்.

மேலும் சாணத்தை வைத்து, சாண எரிவாயு தயாரிக்கின்றனர். ”சாண எரிவாயுத் தயாரிப்புக்காக 25 கன மீட்டர் அளவு கொண்ட தொட்டியை அமைத்து. இதிலிருந்து வெளியேறுற எரிவாயுவைப் பயன்படுத்தி, பண்ணையில் தங்கி வேலை செய்யுற குடும்பங்கள் உணவு தயாரிக்கின்றனர். மேலும் நிலத்திற்கு தேவையான பசுந்தீவன உரமாகவும் கால்நடை கழிவுகள் பயன்படுத்தப்படுகின்றன. சாண எரிவாயுவைப் பயன்படுத்தி ஆயில் இன்ஜினை இயக்குற முயற்சியும் இன்னும் கிராமத்தில் உள்ளது.

**மோகன்ராஜ்**



# புத்துணர்ச்சி தரும் சித்தர்கோயில் மூலிகை குளியல்!

சேலம் டூ இளம்பிள்ளை செல்லும் வழியில் உள்ள அமாவாசைக்கோயில் என்றழைக்கப்படும் ஸ்ரீசித்தேஸ்வரா சுவாமி அருள்புரியும் சித்தர்கோயில் பழமையான சக்திவாய்ந்த கோயில். அங்குள்ள ஊத்துக்கிணறுகளில் பக்தர்களின் மூலிகைக்குளியல் தனிமகத்துவம் வாய்ந்தது..! இரும்புத்தாது கனிம வளங்கள் நிறைந்த கஞ்சமலை அடிவாரத்தில் இக்கோயிலும், இந்த கிணறுகளும் அமைந்துள்ளதால் இயற்கையாகவே அந்த நீரில் இரும்புச்சத்துகளும், அந்த மலைத்தொடரில் மருத்துவக்குணம் வாய்ந்த அரிய மூலிகைச்செடிகள் இருப்பதால் மருத்துவகுணங்களும் நிறைந்துள்ளது...!

அங்கு வாடகைக்கு கிடைக்கும் பக்கெட்களை வாங்கி கொண்டு, எண்ணெய் தேய்த்து, தலைக்கு சீயக்காய் போட்டு நண்பர்களுடன் ஆடி பாடிக்கொண்டே பக்கெட் பக்கெட்டாக மூலிகை நீரை செய்தி குளிப்பது மிகவும் ஆனந்தமானது. மணிக்கணக்கில் நேரம் போவதே தெரியாமல் ஆனந்தக்குளியல் போட்ட அனுபவங்கள் சுகமானவை.

நீரில் இரும்புசத்து காரணமாக சரும நோய் உள்ளவர்கள் மூன்று அமாவாசைகள் தொடர்ந்து குளித்து,கோயில் அருகிலுள்ள கிணற்றில. உப்பு,மிளகு வாங்கி போட்டால் சரும நோய்கள் குணமாகிவிடும்..! மூலிகை மருத்துவகுணங்கள் காரணமாக அளவிடமுடியாத புத்துணர்ச்சி உடம்புக்கும் மனசுக்கும் கிடைக்கும்..! சித்த மருத்துவர்கள் தங்களிடம் சிகிச்சை பெறுபவர்களை குழுவாக அழைத்து வந்து பஞ்சகல்பம் எனப்படும் ஐந்து அரிய மூலிகைகளை கொண்டு தயாரித்த சாறை உடலில் பூசிக்கொண்டு பின் குளியல் போடுவதால் அவர்கள் விரைவில் நலம் பெறுகிறார்கள்.வானரங்களுடன் நகைச்சுவையான அனுபவங்களும் உண்டு..!

ஸ்ரீகாளியம்மன், குன்றின் மீது இருக்கும் ஸ்ரீஞான பாலதண்டாயுதபாணி தெய்வங்களை தரிசிப்பது மரபு..! சுவாமி தரிசனம் முடிந்தவுடன் அனைவரும் நல்ல பசி எடுக்கும் . இங்குள்ள பெரியம்மா கடை பணியாரம் சூப்பரா சுவையா இருக்கும்..! தாகம் தீர்க்க நுங்கு கிடைக்கும்..! இதுவரை இந்த மூலிகைக்குளியல் அனுபவம் இல்லாதவர்கள் அவசியம் சென்று குளித்து , புத்துணர்ச்சியும் ஸ்ரீசித்தேஸ்வர சுவாமியின்அருளையும் பெறுங்கள்.

சித்தர்களில் ஈஸ்வர பட்டம் பெற்ற காலங்கி சித்தரே , இங்கு ஸ்ரீசித்தேஸ்வர சுவாமியாக அருள் புரிகிறார்..! திருமூலர் இங்கு வந்து ,இவரை வணங்கி பின் இருவரும் இங்குள்ள மூலிகை வேர்கள் சம்பந்தப்பட்ட உணவை உண்டாதால் தான் நரை, திரை, மூப்பு நீங்கி இளம் பிள்ளைகளாக மாறியதால் இவ்வூருக்கு, இளம் ள்ளை என்ற பெயர்.ஏற்பட்டதாக சொல்லப்படுகிறது.!

மேலும் சித்த மருத்துவர்கள் கஸ்தூரி மஞ் சள், வெள்ளைமிளகு, வேம்பரிசி, கடுக்காய் , நெல்லிக்காய், கொப்பரைத்தேங்காய், கசகசா, பாதாம் பருப்பு ஆகியவற்றை அரைத்து பசும்பாலில் கலந்து களிம்பு போல தயாரிப்பது பஞ்ச கல்பம் ஆகும் ..!

இதை உடல் முழுவதும் பூசிக்கொண்டு சித்தர்கோயில் மூலிகை தீர்த்த கிணற்றில் குளித்தால் உச்சி முதல் உள்ளங்கால் வரை சரும நோய்கள் குணமாகும்.உஷ்ணம் தணிந்து உடல் குளிர்ச்சியடையும்...!

**சேலம் பிரவீன்குமார்**



# தைப்பூசத் திருவிழாவின் சிறப்பு

தைப்பூசத்தன்று தான் உலகம் தோன்றியதாக ஐதீகம்.

- முருகன் தமிழ்க்கடவுள்.ஆவார்.முருகன் என்றால் அழகு என்று பொருள். முருகன் தேவ சேனாதிபதி (தேவர்களின் சேனாதிபதி) ஆகையால் இவர் ஒரு போர்க்கடவுள் ஆவார். தை பூசத்தன்று முருகன் தருகாசுரனை வதம் செய்த நிகழ்வு ஒரு விழாவாக பழனியில் அனுஷ்டிக்கப் படுகிறது.
- சிவபெருமான் உமாதேவியுடன் இருந்து சிதம்பரத்தில் ஆனந்த நடனம் ஆடி, தரிசனம் அளித்த நாள் தைப்பூசம் என்பர்.
- சிதம்பரத்திற்கு வந்து அரும்பெரும் திருப்பணிகள் செய்து, நடராஜரை இரணியவர்மன் என்னும் மன்னன் நேருக்கு நேராகத் தரிசித்தது இந்நாளிலேயே. இக்காரணங்களுக்காகவே சிவன் கோயில்களில் தைப்பூசத்தன்று சிறப்பு அபிஷேகங்களுடன் பூஜைகள் நடத்தப்படுகின்றன.
- தேவர்களில் குருவாகிய பிரகஸ்பதியின் நட்சத்திரம் பூசம் என்பதால் தைப்பூசத்தன்று குருவழிபாடு செய்வது மிகுந்த பலனைத் தரும் என்பர்.
- வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் ஒரு தை மாத வெள்ளிக்கிழமை புனர்பூச நட்சத்திரத்தன்று தான் ஒளியானார். இதனைக் குறிக்கும் விதமாக அவர் ஒளியான வடலூருக்கு அருகில் உள்ள மேட்டுக்குப்பத்தில், தைப்பூசத்தன்று இலட்சக்கணக்கானோர் கூடி வள்ளலார் விழாவைக் கொண்டாடுகிறார்கள்.

**தைப்பூச விரத முறை :** தைப்பூசத்தன்று அதிகாலையில் எழுந்து குளித்துவிட்டு, திருநீறு, உருத்திராட்சம் அணிந்து சிவபெருமானை வழிபடுவர். தேவாரம், திருவாசகம் போன்றவற்றைப் பாராயணம் செய்வர். உணவு உண்ணாமல் 3 வேளைகளிலும் பால், பழம் சாப்பிடலாம். மாலையில் கோயிலுக்குச் சென்று சிவ பூஜையில் பங்கேற்று சிவனை தரிசித்து விரதத்தை நிறைவு செய்வர்.

**பழனியில் தைப்பூசம் :** பழனி (திருவாவினன்குடி சக்திகிரி) முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்றாகும். திண்டுக்கல் மாவட்டம், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி கோவில் ஒரு மலைக் கோவிலாகும். மூலவர் அருள்மிகு தண்டாயுதபாணி. பதினெட்டு சித்தர்களில் ஒருவரான போகர் மூலவர் சிலையை நவபாஷாணத்தால் செய்து நிறுவியுள்ளார். இக்கோவிலில் தைப்பூசம் பத்து நாட்கள் நடைபெறும் முக்கிய விழாவாகும். ஏழாம் நாள் விழாவில் தேரோட்டம் நடைபெறும். முருகன் தன் இரு துணைவியரான வள்ளி மற்றும் தெய்வயானையுடன் திருமணக்கோலத்தில் ரதவீதிகளில் தேரில் பவனி வருகிறார். பத்தாம் நாள் தெப்போற்சவம் நடைபெறுகிறது.





தைப்பூசத்தன்று மக்கள் பழனியில் குவிவது வாடிக்கை. பக்தர்கள் பல பகுதிகளிலிருந்து பாத யாத்திரையாக பழனிக்கு வருகிறார்கள். நேர்த்திக் கடனாக முருகனுக்கு காவடி எடுக்கிறார்கள். பக்தர்கள் பலநாட்கள் விரதமிருந்து காவடி எடுக்கிறார்கள். காவடி எடுப்பவர்கள் வரும் வழிகளில் பாடும் பாடல்கள் காவடிசிந்து என்று அழைக்கப்படுகின்றன. காவடிகளில் பல வகை உண்டு. அலகு குத்திக்கொண்டு கோவிலுக்கு வருதல். சிலர் சின்ன ரதம் போன்ற வண்டியை பக்தர்களின் முதுகில் கொக்கிகளால் இணைத்து இழுத்து வருகிறார்கள்.

**சர்க்கரை காவடி :** சர்க்கரை பக்தர்களால் கால்நடையாக எடுத்து வரப்படுகிறது.

**தீர்த்தக் காவடி :** கொடுமுடியிலிருந்து (கரூர் மாவட்டம்) காவிரி தீர்த்தம் பக்தர்களால் கால்நடையாக எடுத்து வரப்படுகிறது.

**பறவைக் காவடி :** அலகு குத்தியவர் தொங்கியவாறு ஒரு வாகனத்தில் அழைத்து வரப்படுகிறார்.

**பால் காவடி :** பால்குடம் காவடியாக பக்தர்களால் கால்நடையாக எடுத்து வரப்படுகிறது.

**மச்சக்காவடி :** மீன் நீருடன் பக்தர்களால் கால்நடையாக எடுத்து வரப்படுகிறது.

**மயில் காவடி :** மயில் தோகையால் அலங்கரிக்கப்பட்ட காவடி பக்தர்களால் கால்நடையாக எடுத்து வரப்படுகிறது.

மேலும் தைப்பூசம் வடலூர், ஈழம், சிங்கப்பூர், மலேசிய, மொரீசியஸ், ஆஸ்திரேலியா உள்ளிட்ட ஊர்களிலும் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.


# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்



# காவல்துறை உளவியல்

இந்திய அளவில் காவல்துறையில் நிகழும் தற்கொலைகள், மரணங்கள் குறித்து தேசிய குற்ற ஆவணக் காப்பகம் தகவல் வெளியிட்டுள்ளது.

நாடுமுழுவதும் 821 காவலர்கள் பணியின்போதே உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கிறது தேசிய குற்றப்பிரிவு ஆவண காப்பகத்தின் புள்ளிவிபரம். தமிழகத்தில் பணியின் போது தாக்குதல்களுக்கு உள்ளாகி இறப்பவர்களை விட தற்கொலை செய்துகொள்ளும் காவலர்களின் எண்ணிக்கை அதிகம்.



இந்தியர்களின் சராசரி ஆயுட்காலம் 67 வயது எனும் நிலையில் தமிழகக் காவலர்களின் இந்த அற்பாயுளுக்கு காரணம் என்ன?

24 மணிநேரமும் ‘காவலர்களாக மட்டுமே வாழும் பணிச் சூழல்தான் காவலர்களின் முதல் எதிரி. குடும்பத்துடன் நேரம் செலவிடுதல், நண்பர்களுடன் இணைந்திருத்தல், பொழுதுபோக்கு, சமூகக் கலப்பு என சராசரி குடிமக்கள் அனுபவிக்கும் உரிமைகள் காவலர்களுக்கு மறுக்கப் படுகிறது.



பெரும்பாலான காவலர்கள் படபடப்பு, புலம்பல், சந்தேகம், குழப்பம், தெளிவின்மை என எதிர்மறை உணர்ச்சிகளில் அவர்கள் உழல்கின்றனர். முக்கியமாக குடும்பத்துடன் நேரம் செலவிடவும் அன்பு செலுத்தவும் பணிச்சூழல் இடமளிக்க வில்லை. இதனால், ஏற்படும் மன அழுத்தம் தற்கொலைக்கும் இளவயது மரணங்களுக்கும் காரணமாகிறது என்கின்றனர் மனநல நிபுணர்கள்.

தற்கொலை செய்துகொள்ளும் காவலர் களில் பெரும்பாலானவர்கள் ஆண்கள். ஆண் காவலர்களை போலவே பெண் காவலர்களும் உடல், மன பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். ஆனால், அந்தப் பாதிப்புகள் அவர்களை தற்கொலை வரை இட்டுச் செல்வது மிகவும் அரிது. மன உளைச்சலுக்கு ஆளாவதில் ஆண்களை விட, பெண் காவலர்களின் எண்ணிக்கை அதிகம். ஆனாலும் பெண்கள்

அவற்றை எளிதில் கடந்து விடுகின்றனர். ஒருசிலர்தான் தற்கொலை வரை செல்கின்றனர்.

மொத்த காவலர்களின் எண்ணிக்கையில் 10.57% ஆகும். இதில் 7% உயரதிகாரிகள். மீதமுள்ள 93% கீழ்நிலைக் காவலர்களே அதிகப் பணிச்சுமைக்கு ஆளாகின்றனர்.



அவசர காலங்களில் பல நாட்கள்கூட, குடும்பத்தைப் பிரிந்திருக்க வேண்டியிருக்கும். திருமணமானோர் வீடு, குழந்தைகளை கவனிக்கும் குடும்பத் தலைவி யாகவும் இருக்க வேண்டியுள்ளது. இது அவர்களுக்கு மன அழுத்தத்தை அதிகரிக்கிறது. மேலும் உடல்ரீதியான பிரச்னைகள் வாட்டும் நேரத்தில் விடுப்பு எடுக்க முடியாது. இரவு நேரப்பணி போன்றவையும் இவர்களை சோர்வடையச் செய்கிறது என்றும் கூறுகின்றனர் நிபுணர்கள்.

குடும்பத்துடன் நேரம் செலவழிக்காததால் எந்த பிடிப்பும் இல்லாத நிலைக்கு காவலர்கள் தள்ளப்படுகின்றனர். இசை கேட்பது, புத்தகம் படிப்பது, திரைப்படம் பார்ப்பது என மனதை புத்துணர்வு பெறச் செய்யும் பொழுதுபோக்கு களுக்கு நேரமில்லை.

திருட்டு, கொலை போன்ற குற்றச் செயல்களில் குற்றவாளிகளை உடனே பிடிக்க உயரதிகாரிகளால் கொடுக்கப்படும் அழுத்தம் பெரிய நெருக்கடியாக கடைநிலை காவலர்க ளுக்கு மாறுகிறது. அதிலிருந்து தப்பிக்க பலரும் மதுவை நாடுகிறார்கள். காவலர்களில் பலர் பகல் குடிகாரர்களாக மாறுகின்றனர் என்கிறார் காவல்துறை உயரதிகாரி ஒருவர்.

வேலைக்காகச் செல்லும் இடத்தில், கிடைத்ததை எந்த நேரத்திலும் சாப்பிட வேண்டிவரும். உடல் மீது அக்கறை செலுத்த முடியாது. முறையற்ற உணவுப் பழக்கம் நோய்களுக்கு வித்திடுகிறது. தவறான வாழ்க்கை முறையால் வரும் சர்க்கரை மற்றும் உயர் ரத்த அழுத்தப் பாதிப்புகளுக்கு ஆளாகின்றனர். முறையான உடற்பயிற்சி செய்ய முடியாது. நேரத்திற்கு தூங்க முடியாது. அதிக நேரம் நின்று வேலை செய்வதால், எலும்பு தொடர்பான நோய்கள் தாக்குகின்றன. மது மற்றும் இதர போதைப் பழக்கங்களால் கல்லீரல் நோய்களும் அதிகம் பாதிக்கிறது.

ஒரு சாதாரண மனிதன் தன் வாழ்நாள் முழுவதும் பார்க்காத அவலங்களை ஒரு காவலர் ஒரே நாளில் பார்க்கி றார். மரணம், அழிவு, மனித அவலம், எதிர்மறை உறவுகள், பயங்கர விபத்துகள், விவரிக்க முடியாத குற்றங்கள் என மோசமானவற்றைப் பார்த்துப் பார்த்து உணர்ச்சியற்றவர்களாக மாறுகின்றனர்.

குடும்பத்திடமிருந்து துண்டிக்கப்பட்டே இருப்பதால் பெரும்பாலும் சக காவலர் மீதோ வெளிநபர்கள் மீதோ ஈடுபாடு கொண்டு திருமணத்தை மீறிய உறவாக அது வளர்கிறது. நாளடைவில் இது கடுமையான மனப் பிரச்னை களை உண்டாக்கிறது.

“காவலர்களுக்கு தங்கள் உரிமைகளைக் கேட்க அமைப்பு கிடையாது. எனவேதான் எல்லா கோபங்களையும் மக்களிடம் காட்டுகின்றனர். நாட்டின் சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு என மக்களை நேரடியாகச் சந்திக்கும் துறை இது. காவலர்களின் பிரச்னையை மேலோட்டமாகப் பார்க்காமல், அவர்களின் தேவைகள் என்ன, அவற்றை நிறைவேற்றுவது எப்படி என ஆக்கப் பூர்வமாக செயல்பட வேண்டியது அரசின் கடமை. யானைகளுக்கு புத்துணர்வூட்ட ஆண்டுதோறும் புத்துணர்வு முகாம்கள் நடத்தும் தமிழக அரசு, காவல்துறை யினரின் மனநலத்தைக் காக்க கூடுதலாக அக்கறை செலுத்த வேண்டும் என்கின்றனர் சமூக ஆர்வலர்கள்.

# TIGER THE AND THE WOOD-PECKER

# (Tit for Tat)

One day as a tiger was devouring the game he had killed, a bone got stuck in his teeth. A woodpecker who lived in the branches above watched him eating the game but did not realize what had happened. The tiger tried and tried but could not get the bone out. "I will not be able to eat anything unless I get this bone out" said the tiger. Days passed by and he was getting weaker and weaker.

The woodpecker was wondering, what was wrong with the tiger? "What is the matter with you? Why are you keeping your mouth open?" asked the woodpecker.


The tiger beckoned to the woodpecker to come near and he pointed to the bone in his teeth.

"Oh! you are in a lot of pain" said the woodpecker. "I can remove the bone only if you promise to give me a portion of the flesh of the animal you hunt." The tiger nodded his head as he could not speak.

The woodpecker flew into the tiger's mouth, caught the bone firmly with his strong beak and came out of the tiger's mouth at full speed. Then the woodpecker perched on a tree. He dropped the bone on the tiger's head.



"I better get myself some food, I am starving" said the tiger. A few hours later the tiger killed an animal and began to eat. The



woodpecker tried to remind the tiger of his promise to share his food. But the tiger looked at the woodpecker and pretended to have never seen him.

"Who are you? Why should I offer any part of this?" said the tiger. The woodpecker was shocked. The tiger was so ungrateful. He came down from the branches and said, "Don't you remember me? I pulled the bone out from your teeth! How could you forget me?" The tiger laughed and said, "You know I am a wild animal. I could have easily eaten you up when you entered my mouth. Be grateful that I let you free."

The woodpecker was furious. "That's it. I must teach him a lesson. He took advantage of me. He thinks I am weak. But I have my sharp beak. " The woodpecker patiently waited for the tiger to dose off after a heavy meal.

"Now is the time," said the woodpecker.

The woodpecker swooped down and pecked at one of the tiger's eyes blinding it. The tiger roared with pain "You have pierced my eyes. How can you be so cruel?" roared the tiger in pain.

"You know, I have a sharp beak. I could have easily blinded both eyes but I didn't, be grateful for that and stop roaring."

**MORAL:**

திருக்குறள்

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு.

விளக்கம்: எந்த நன்மையை அழித்தவர்க்கும் தப்புதற்கு வழி உண்டாகும்: ஆயின், ஒருவர் செய்த உதவியை மறந்து அழித்தவனுக்கு உய்வே கிடையாது.

**Commentary:.**

He who has killed every virtue may yet escape; there is no escape for him who has killed a benefit .





# மருத்துவ குணம்மிக்க பனங்கற்கண்டு

பனங்கற்கண்டு வாத பித்தம் நீங்கும். பசியை தூண்டும். புஷ்டி தரும். நுரையீரல் மற்றும் தொண்டை பாதிப்புகளுக்கு கொடுக்கப்படும் ஆயுர்வேத மருந்துகளில் பனைவெல்லம் சேர்க்கப்படுகிறது. தமிழகத்தில் பனை மரத்தின் வெல்லத்தை இரண்டு வகையாக சொல்வார்கள்.

முற்றிலும் சுத்தப்படுத்தாத, கெட்டியான கரு நிற வெல்லத்தை "கருப்பட்டி" என்பார்கள். இதை சுத்தப்படுத்தப்பட்ட படிகங்களாக உருவாகும் சர்க்கரை 'பனங்கற்கண்டு' எனப்படும் இதற்கு மருத்துவ குணங்கள் உள்ளன.

பாலில் பனங்கற்கண்டை சேர்த்து காய்ச்சி குடித்தால் மார்புச்சளி இளகும். முக்கியமாக தொண்டைப்புண், வலி இவை அகலும். முன்னோர்கள் பனங்கற்கண்டு கலந்து காய்ச்சிய பாலையே அருந்துவது வழக்கம். அதனால் அவர்களின் குரல் வளம் குறையாமல், பாதுகாக்கப்படுகிறது. கூடவே சில மூலிகைகளும் சேர்க்கப்படுவது உண்டு. தவிர பனங்கற்கண்டு, உடல் உஷ்ணம், காங்கை, நீர் சுருக்கு, ஜுர வெப்பங்கள் இவற்றுக்கு நல்லது.

பனை மரத்தில் இருந்து கிடைக்கும் பதநீர் பலவிதமான நோய்களை தீர்க்கும் மருந்தாக உள்ளது. பனை நீரிலுள்ள சீனி சத்து உடலுக்கு தேவையான வெப்பத்தை தருகிறது. இதிலிருக்கும் குளுக்கோஸ் மெலிந்து தேய்ந்து வாடிய உடலுடைய குழந்தைகளின் உடலை சீராக்கி நல்ல புஷ்டியை தருகிறது. கருவுற்ற பெண்களுக்கும் மகப்பேறு பெண்களுக்கும் ஏற்படுகின்ற மலச்சிக்கல், வயிற்றுப் புண் முதலியவைகளை குணப்படுத்துகிறது. இரத்த அழுத்தத்தை சீராக்குகிறது.

டைபாய்டு, சுரம், நீர்க்கட்டு முதலிய வியாதிகளை போக்குகின்ற நல்ல மருந்தாகவும் இது செயல்படுகிறது. இதை அருந்துவதால் இருதய நோய் குணமாகும். இருதயம் வலுவடையும். இதிலிருக்கும் கால்சியம் பற்களை உறுதிப்படுத்தி, ஈறுகளில் ரத்தக்கசிவு ஏற்படுவதை தடுப்பதோடு பற்களின் பழுப்பு நிறத்தையும் மாற்றுகிறது. இதிலிருக்கும் இரும்புச்சத்து பித்தத்தை நீக்கி சொறி, சிரங்கு உள்பட சகல தோல் வியாதிகளையும் நீக்குவதுடன் கண் நோய், ஜலதோசம், காசநோய் இவைகளையும் நீக்குகிறது.



# கபா நியூ

"பொதுவாக என் மனசு தங்கம் ஒரு போட்டின்று வந்துவிட்டா சிங்கம்" என்று பாடியபடியே உள்ளே வந்தார் கபாலிகான்.

அவருக்கு கரும்பு ஜூஸ் கொடுத்து வரவேற்றோம். செய்திகளை பிழிய ஆரம்பித்தார்.

ஓ.பன்னீர்செல்வம் செயல்பாடு எப்படி?

டெல்லியின் செல்லப்பிள்ளையாக இருக்கும் அவர் "உங்களை மீறி போக மாட்டேன்" என்று அவ்வப்போது சின்னம்மாவை சந்தித்து சொல்லி வருகிறார். ஜல்லிக்கட்டு போராட்டத்தின்போது என்னதான் அவர்மீது ஏகப்பட்ட Comment போட்டாலும் கொஞ்சம்கூட அசராமல் அரசின் சார்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுத்தார். போலீசாரின் கடைசி கட்ட நடிவடிக்கைகளுக்கு அவரின் முழு ஒப்புதல் இல்லாமல் நடந்திருக்கும் என்று அவருடைய ஆதரவாளர்கள் கூறுகிறார்கள். அரசியல் வரலாற்றில் முதன்முதலாக குடியரசு தின விழாவில் கொடியேற்றி வைத்த முதலமைச்சர் என்ற பெருமையைப் பெற்றார் ஓ.பி.எஸ். குடும்பத்தினருடன் நிகழ்ச்சியில் பங்கு பெற்றது கண்ட அரசியல் நோக்கர்கள் அரசியலில் அவர் கொடி கட்டிப் பறக்கிறார் என்கிறார்கள். சசிகலா குரூப் இவரை நம்புவதா? வேண்டாமா? என்று குழம்பிப்போயிருக்கிறார்கள்.

# லிகான்

# ஸ்

**Owned and published by M.SUNDARAMOORTHY from No.602 Suruthi Block, Chitra Avenue,
9, Choolaimedu High Road, Chennai-600 094. and printed by him at
SRI PADMALAYA PRINTERS. No.8/18, Manali Salai, Korukkupet, Chennai-600 021.
Editor : M.SUNDARAMOORTHY.**